## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண். 4/2023

அ.சா. 22 (LW 31)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பாலகுரு | **தொழில்** | |
| **த/க பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **25.08.2025.** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2 எதிரிகள் ஆஜர்

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காவல்துறை தலைவர் மதுரை மண்டலம், அலுவலகத்தில் தனிப்பிரிவு ஆய்வாளராக பணிபிரிந்து வருகிறேன். கடந்த 25.06.2021 அன்று நிலக்கோட்டை காவல் ஆய்வாளராக பொறுப்பிலிருந்த போது நிலக்கோட்டை காவல்நிலைய குற்ற எண். 99/2021 இதச பிரிவுகள் 174 சிஆர்பிசி வழக்கை நான் பார்வையிட்டு எனது புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். இவ்வழக்கின் முதல்தகவல் அறிக்கையை சிறப்பு சார்பு ஆய்வாளர் ரவி என்பவரும் முதல் விசாரணையை அம்மையநாயக்கனூர் காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பு நிலக்கோட்டை காவல்நிலைய சண்முகலெட்சுமி அவர்களும் மேற்கொண்டிருந்தனர். 11.07.2021 அன்று நான் இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டேன். சம்பவ இடம் பார்வைமகஜர், வரைபடத்தில் உள்ளதுபடி இருந்ததால் தனியாக தயார் செய்யவில்லை. பின்பு சாட்சிகள் மொக்கராஜ்,கார்மேகம், கருப்பையா, வெள்ளைச்சாமி ஆகியோர்களை விசாரித்து கூடுதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 12.07.2021 அன்று சாட்சிகள் சுரேஷ், போதுமாணிக்கம், தங்கமணி, தங்கமுத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.07.2021 அன்று இவ்வழக்கில் இறந்து போன சென்ராயன் என்பவர் உடல் மீது உடற்கூராய்வு செய்த மருத்துவ அலுவலகர் சாபுதின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்ட பிரிவை 174 சிஆர்பிசியி லிருந்து 302 இதச வாக சட்ட மாறுதல் செய்து அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை இதுதான். **அது அ.த.சா.ஆ.16. ஆகும்.** பின்பு இவ்வழக்கின் சட்ட பிரிவினை 302 இதசவாக மாறுதல் செய்து இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் நிலக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு மாற்றம் செய்ய நிலக்கோட்டை வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுதல் கடிதம் அனுப்பி வைத்தேன். 15.07.2021 அன்று இவ்வழக்கில் வனிதா என்பவர் விசாரணைக்காக நிலக்கோட்டை காவல்நிலையத்திற்கு ஆஜரானவரை விசாரணை செய்ததில் அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 09.15 மணி முதல் 11.00 மணி வரை சாட்சிகள்

சிவக்குமார் மற்றும் பிரான்சிஸ் சேவியர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வனிதா என்பவர் தன்னைப்பற்றியும், தன் குடும்பத்தை பற்றியும் தனக்கும் வழக்கில் இறந்த தன் கணவராகிய சென்ராயன் என்பவருக்கும் உள்ள குடும்ப பிரச்சனை பற்றியும் அய்யனார் என்பவருடன் தனக்குள்ள தொடர்பு பற்றியும் கூறியதுடன் தன்னை அழைத்துச் சென்றால் தனது கணவரை கொலை செய்ய பயன்படுத்திய கத்தியை தனது வீட்டின் மாடியில் மறைத்து வைத்துள்ளதை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி வனிதா என்பவரை அழைத்துக் கொண்டு கே. குரும்பபட்டியில் அமைந்துள்ள அவரது வீட்டிற்கு சென்றேன். எதிரி வனிதாவின் வீட்டின் மாடியில் கிழக்கு பக்கம் உள்ள அறையில் மேல் சிலாப்பில் இருந்து அவர் அடையாளம் காட்டி ஆஜர் செய்த சுமார் 11 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியும், சுமார் 1 1/2 செமீ இரும்பு பூண் போட்டதும், சுமார் 21 செ.மீ நீள இரும்பு பாகமுள்ள மொத்தம் 33 1/2 செ.மீ அளவில் உள்ள கூர்மையான நுணி வளைந்த கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன் கைப்பற்றினேன். பின்பு எதிரி மற்றும் வழக்குச் சொத்துடன் நிலையம் வந்து உரிய ஆவணங்களை பதிவு செய்தேன். சாட்சி மொக்கராஜ் என்பவரை மீண்டும் அழைத்து கூடுதல் மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் சிவக்குமார், பிரன்சிஸ் ஆகியோரை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் ஆஜர் செய்தேன். **அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.17. ஆகும்.**

சுமார் 11 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியும், சுமார் 1 1/2 செமீ இரும்பு பூண் போட்டதும், சுமார் 21 செ.மீ நீள இரும்பு பாகமுள்ள மொத்தம் 33 1/2 செ.மீ அளவில் உள்ள கூர்மையான நுணி வளைந்த கத்தி இதுதான். (அந்த கத்தி ஏற்கனவே சா.பொ.1. ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.) பின்பு 16.07.2021 அன்று இவ்வழக்கில் இறந்து போன சென்ட்ராயன் என்பவரின் உடல் உள்ளுறுப்புக்களை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய உதவி அறிவியல் சோதனையாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.18. ஆகும்**. **Viscera report அ.த.சா.ஆ.19. ஆகும்.** அன்றைய தினம் காவலர் சரவணன், அய்யர்சாமி, சிறப்பு சார்பு ஆய்வாளர் ரவி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 20.07.,2021 அன்று மருத்துவர் சாபுதின் என்பவரை விசாரித்து கூடுதல் வாக்குமூலம் பதிவு செய்தும் உடற்கூராய்வு அறிக்கை பெற்றேன்.

அன்றைய தினம் 13.00 மணிக்கு சிறுநாயக்கன்பட்டி பிரதான சாலை கொம்புக்காரன் பட்டி ஊருக்கு தெற்கே உள்ள கரடு அருகில் இவ்வழக்கின் 1வது எதிரியான அய்யனார் என்பவரை பிடித்து விசாரணை செய்தேன். அப்போது அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை 13.15 மணி முதல் 14.15 மணி வரை பதிவு செய்தேன். சாட்சிகள் கண்ணன் மற்றும் பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னைப்பற்றியும் தனது குடும்பம் பற்றியும் தனக்கும் இவ்வழக்கின் 2ம்எதிரியான வனிதா என்பவருடன் தனக்குள்ள உறவு பற்றியும் கூறியதுடன் மேலும் 2வது எதிரியின் கணவரான சென்ராயன் என்பவரை கொலை செய்தது பற்றியும் கூறினார். தன்னை அழைத்துச் சென்றால் சென்ராயனை கொலை செய்த பின்பு தான் தப்பித்துச் செல்வதற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனத்தை வத்தலக்குண்டு பெரியகுளம் மெயின்ரோட்டிலுள்ள சோனை ஸ்ரீ டுவீலர் ஒர்க் சாப்பில் நிறுத்தி

வைத்துள்ளதை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் எதிரி அய்யனாரை அழைத்துக் கொண்டு அதே சாட்சிகள் முன்பு பகர் 12.00 மணிக்கு மேற்படி ஒர்க்சாப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த TN 57 BX 1764 பதிவுவெண் உள்ள Hero Pleasure கருப்பு மற்றும் சிவப்பு நிறம் கொண்ட இருசக்கர வாகனத்தை அவர் அடையாளம் காட்டி ஆஜர் செய்ததை அத்தாட்சியில் கைப்பற்றினேன். (அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.த.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)

பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் காவல்நிலையம் வந்து உரிய ஆவணங்களை பதிவு செய்தேன். சாட்சிகள் கண்ணன், பன்னீர் செல்வம், நாகேந்திரன், ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை நீதிமன்ற காவலில் வைப்பதற்கு ஏற்பாடு செய்தேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 இதுதான். **அது அ.த.சா..ஆ.20 ஆகும்.** பின்பு 21.07.2021 அன்று சாட்சிகள் பிரேமா, செல்லம்மாள், கிருஷ்ணவேணி, காட்டுராஜா, நித்திஷ், காவலர் தயாளன், நிலக்கோட்டை அனைத்து மகளிர் சார்பு ஆய்வாளர் லதா, ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கில் சாட்சி காட்டுராஜா ஆஜர் செய்த குறுந்தகடு ஒன்றை உரிய படிவத்தின் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். பின்பு 22.07.2021 அன்று இவ்வழக்கின் சட்ட பிரிவை 302 இதசவிலிருந்து 120(b), 302 .201 இதச பிரிவுகளாக சட்ட பிரிவு மாறுதல் செய்து மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு 27.07.2021 அன்று எதிரிகள் அய்யனார் மற்றும் வனிதா ஆகியோர்கள் மீது இதச பிரிவுகள் 120(b), 302 .201 படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வழக்கு பதிவு செய்து 4 மாதங்கள் கழித்துதான் 25.06.2021 அன்று என் விசாரணைக்கு வந்தது என்றால் தவறு 3 மாதங்கள் கழித்து வந்தது. அ.த.சா.ஆ.11 முதல் தகவல் அறிக்கையில் எதிரி பற்றி குறிப்பிடவில்லை என்றாலும் முன்பகை பற்றியோ, இறந்து போனவருக்கு தலையில் காயம் இருந்தது பற்றியோ எந்த தகவலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.11 முதல் தகவல் அறிக்கையில் எனது மகனின் கழுத்திலும், ஹாலில் உள்ள பேனிலும் சேலையால் தூக்கு மாட்டிய நிலையில் இருந்தது என்று உள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ-13. ல் இறந்தவரின் கழுத்தில் இருந்த (காயம்) கன்றிய நிலையில் காணப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ-13. ல் 9 வது காலத்தில் இறந்த சென்ராயனின் உடல் எடை அதிகமாக இருந்ததால் சேலை கிழிந்ததில் தலை குப்புற கீழே விழுந்த சென்ராயன் மூக்கில் அடிபட்டு இரத்தம் வெளியேறிய நிலையில் இறந்து கிடந்துள்ளார் என விசாரணையில் தெரிய வந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு முன்பு விசாரணை மேற்கொண்ட ஆய்வாளர் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். அ.த.சா.ஆ-13. ல் 10 வது காலத்தில் எந்த கருவி என்ற இடத்தில் எந்த கருவியை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

பிரேத விசாரணை அறிக்கை நீதிமன்றத்தில் பெறப்பட்ட தேதி 06.08.2021 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டுள்ளது. என் புலன்விசாரணையின் போது சம்பவ இடத்திலிருந்து இறந்தவரின் கழுத்திலிருந்ததாக சொல்லப்பட்ட சேலை, அந்த இடத்தில் கிடந்த இரத்தக் கறை, பேன், பேனில் சுற்றியிருந்த சேலை, இறந்தவரின் செல்போன் , அந்த இடத்தில் இறந்தவரின் கைரேகை ஆகியவற்றை கைப்பற்றினீர்களா என்றால் நான் கைப்பற்றவில்லை.

ஏற்கனவே முதல் புலன்விசாரணை செய்த ஆய்வாளராவது மேற்படி பொருட்களை சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றினாரா என்பது என் கவனத்திற்கு வந்ததா என்றால் நான் அப்போது வழக்கு கோப்பை பார்வையிட்ட போது என் கவனத்திற்கு வரவில்லை. அ.சா.12 வி.எ.ஒ சம்பவ தேதியான 10.03.2021 அன்றும் சம்பவம் நடந்த கிராமத்தின் கிராம நிர்வாக அதிகாரியாக பணியிலிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. சந்தேக மரணம் என்பதால் சம்பவத்தின் போது சம்பவ கிராமத்தில் பணியிலிருந்த கிராம நிர்வாக அதிகாரியிடம் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 15.07.2021 அன்று கிராம நிர்வாக அலுவலரிடம் என்னால் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு முன்பாக வேறு புலன் விசாரணை அதிகாரியால் அந்த கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

அ.சா.15,லதா, சார்பு ஆய்வாளரிடம் இறந்த சென்ராயன் கொடுத்த புகார் மற்றும் ரசீது எண். 240/2020 மற்றும் சென்ராயனிடம் பதிவு செய்த வாக்குமூலம் மற்றும் 2 ம் எதிரி வனிதாவிடம் பெற்ற வாக்குமூலம் இவைகள் யாவும் மேற்படி சார்பு ஆய்வாளரால் என்னிடம் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுத்தார், நான் பார்வையிட்டேன். ஆனால் அந்த ஆவணங்களை இந்த வழக்கோடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சென்ராயன் உயிருடன் இருந்த போது இந்த புகாரை தன் மனைவி வனிதா மீதும், வனிதாவின் தாய்மாமா முருகன் என்பவர் மீதும், சொத்து சம்மந்தமாக கொடுத்திருந்தார் என்றும் அந்த ஆவணங்களை இந்த கொலை வழக்கில் தாக்கல் செய்தால் இந்த கொலை வழக்கில் விரோதமாக போய்விடும் என்பதால் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தவிர்த்து விட்டோம் என்றால் தவறு,

அ.த.சா.ஆ.14 மற்றும் அ.த.சா.ஆ.15 ஆவணங்களுக்கு அத்தாட்சி மற்றும் படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காவல்நலையத்தில் ஆஜர் செய்யப்படும் பொருள்களுக்கு அத்தாட்சி தயார் செய்வது கிடையாது. மாறாக படிவம் 91 ல் கைப்பற்றப்படும். மேலும் நீதிமன்றத்திற்கு உரிய

படிவத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இந்த வழக்கில் படிவம் 91 பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சிடி அ.சா.20 காட்டுராஜாவால் என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சிடியை ஆவணமாக எடுப்பதற்கு தேவையான 65(பி) சான்றிதழ் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்ககு பின்பு வந்த காவல் ஆய்வாளர் பெற்று தாக்கல் செய்துள்ளார். அவர் இந்த வழக்கில் சாட்சியாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.15 ஆவணத்தில் உள்ள நீதிமன்ற முத்திரையிலுள்ள சீலில் உள்ள தேதி பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றாலும் அதிலுள்ள மற்ற தாள்களில் உள்ள தேதிகளி் பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 65(பி) சான்றிதழில் தேதி எதுவுமே குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

21.07.2021 க்கு முன்னால் அ.சா.20, காட்டுராஜா, அ.சா.21, நித்திஷ் ஆகியோரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனவே இதற்கு முன்னால் மேற்படி சாட்சிகள் சிடியோ,ஆவணங்களோ என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த சிடியை எனக்கு முன்பு புலன்விசாரணை செய்த அதிகாரியிடமும் கொடுக்கவில்லை என்பது வழக்கு கோப்பை பார்வையிட்ட போது எனக்கு தெரிய வந்ததா என்றால் தெரிய வந்தது. அ.சா.21 நித்திஷ்டம் காட்டுராஜா மேற்படி சிடியை என்னிடம் கொடுப்பதற்கு 1 1/2 மாதங்களுக்கு முன்பே கொடுத்து பதிவிறக்கம் செய்ய சொல்லியிருந்தார் என்றால் சரிதான். நான் அ.சா.20. காட்டுராஜாவிடம் செல்போனோ, மெமரிகார்டையோ கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 65(பி) சான்றிதழில் அ.த.சா.ஆ.15 செல்போனின் மாடல், IME எண், கம்ப்யூட்டரின் மாடல், கம்ப்யூட்டரின் மென்பொருள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த சிடியில் பதிவாகியிருக்கின்ற சங்கதிகள் குறித்து ஒலிவடிவங்களை (Voice Test) ஆய்வுக்கு அனுப்பு அறிக்கை பெறவில்லை என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.10 போட்டோக்களுக்கு 65(பி) சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.10 போட்டோ செல்போனின் மாடல், IME எண் பற்றிய எந்த விவரமும் இல்லை என்றாலும் எங்கே பிரிண்ட் செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். 15.07.2021 அன்று 2 வது எதிரியிடம் கைப்பற்றிய சா.பொ.1. கத்தியும் சம்பவம் நடந்த 4 மாதங்கள் கழித்து கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். நான் சா.பொ.1. கத்தியை கைப்பற்றிய தேதிக்கு முன்பாக அந்தவீட்டில் யார்,யார் வசித்தார்கள் என்றால் அந்த வீடு பூட்டியிருந்தது. யாரும் குடியிருக்கவில்லை. அந்த வீடு எவ்வளவு காலம் பூட்டியிருந்தது என்ற விவரம் என் விசாரணையில் தெரிய வந்ததா என்றால் எனக்கு தெரியாது.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டிற்கு அருகில்தான் மற்றொரு வீட்டில் இறந்த சென்ராயனின் பெற்றோர்கள் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.10 ல் உள்ள புகைப்படத்தில் மேலே உள்ள வீட்டிற்கு வெளியே தனிப்படிக்கட்டு உள்ளது என்றால் சரிதான். கீழே உள்ள வீட்டிற்கு செல்வதற்கு அதேபோல் வெளிப்படிக்கட்டு இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி வீட்டின் வாசல் எந்த திசை நோக்கி உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. அந்த வீட்டில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. எந்த அறையிலிருந்த பரணியிலிருந்து நான் சா.பொ.1. கத்தியை கைப்பற்றினேன் என்றால் இறந்தவரின் வீட்டின் மாடிப்படியில் உள்ள கிழக்கு பக்கம் உள்ள அறையில் சிலாப்பில் இருந்து கைப்பற்றினேன்.

20.07.2021 அன்று 1வது எதிரியை கொம்புக்காரன்பட்டியில் கைது செய்த போது அவரிமிருந்து வாகனத்தை கைப்பற்றும் போது அந்த கைப்பற்றுதல் சாட்சிகள் இருந்தார்கள் என்றால் சரிதான். 1வது எதிரியின் கைதும் சம்பவ தேதியிலிருந்து 4 மாதங்கள் கழித்துதான் என்றால் சரிதான். சோனாஸ்ரீ ஒர்க்சாப் வத்தலக்குண்டில் காவல் நிலையத்திலிருந்து சுமார் 100 அடி தூரத்தில் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வண்டியை கைப்பற்றும் போது அந்த வண்டி கடையின் முன் போர்சனில் இருந்தது. அது சர்வீஸ் செய்யப்பட்டிருந்ததா என்றால் என்கது தெரியாது. அ.த.சா.ஆ.5 அத்தாட்சியில் கடை முன் போர்சன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

சா.பொ.1 கத்தி நுனி வளைந்திருப்பதும், கூர்மையாக இருப்பதும் வெவ்வேறு என்றால் சரிதான். இவ்வழக்கில் முதலில் அ.சா.1 க்கு தகவல் கொடுத்த முருகேசனை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மொக்கராஜ் மகளிர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்ததாக என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3. கருப்பையா என் விசாரணையில் செல்போனில் படம் எடுத்ததாக என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3. அ.சா.4 ம் புகார் கொடுக்க உடன் சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.15. என் விசாரணையில் அய்யனாரை விசாரித்து அவரிடம் குடும்பத்தை கெடுக்க கூடாது என்று சொல்லி ஆலோசனை வழங்கிய விவரத்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும் வாக்குமூலங்கள் பெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் ,

எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் , மேற்படி ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஆயுதங்களுக்கும், இருசக்கர வாகனத்திற்கும், எதிரிகளுக்கும், குற்ற சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் மகஜர், வரைபடம் ஆகியவை காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்களான அ.த.சா.ஆ.10 மற்றும் அ.த.சா.ஆ.14 ஆகிய இரண்டும் வழக்கிற்காக சித்தரிக்கப்படடு , எடிட் செய்யப்பட்டு , மார்பிங் செய்யப்பட்டு பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 2ம் எதிரிக்கும் அ.த.சா.ஆ.14 க்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.20 மற்றும் அ.சா.21 காவல் நிலையத்தின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. இறந்து போன சென்ராயன் நிறைய நபர்களிடம் கடன் வாங்கி பணப்பிரச்சனை இருந்து வந்ததாலும் மற்றும் செல்வி மற்றும் கண்மணி ஆகியோரிடம் கள்ளத்தொடர்பில் இருந்து வந்தார் என்றும் அவரின் இறப்பிற்கு அவராக தூக்கு மாட்டிக் கொண்டதுதான் காரணம் என்றால் சரியல்ல. அ.சா.1. வற்புறுத்தலும், தூண்டுதலின் காரணமாகத்தான் இந்த வழக்கு போடப்பட்டது என்றாலும் 1,2 எதிரிகளுக்கும் இடையே கள்ளத் தொடர்பு இல்லை என்றாலும் முறையாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>2வது எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை தங்கள் தரப்பிலும் ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.08.25 08:23:16 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.